DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**SC. No.51/2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW21 |
| Name | : | சேகர் |
| Father's / Husband's Name | : | சின்னதுரை |
| Age | : | 60 |
| Religion | : | இந்து |
| Calling | : | விவசாயம் |
| Caste | : | M.B.C |
| Village | : | அம்மூர் |
| Date | : | 13.04.2022 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் அம்மூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 24.10.2015ம் தேதி என்னுடைய மனைவியின் அக்கா சல்லி என்பவரின் மகன் ஆனந்த் மற்றும் அவருடைய நண்பர் கார்த்தி ஆகியோர் ஹீரோ ஹோண்டா டான் கருப்பு கலர் இருசக்கர வாகனத்தை என் வீட்டினிடம் விட்டு விட்டு கோயிலுக்கு சென்று வருவதாக சொன்னார்கள். போலிசார் என் வீட்டினிடம் வந்து வண்டியை என் வீட்டினிடம் விட்டு வைத்திருப்பதை பற்றி கேட்டார்கள். பிறகு போலிசார் 2 நாட்கள் கழித்து இருசக்கர வாகனத்தை எடுத்து சென்றுவிட்டார்கள். அந்த இருசக்கர வாகனத்தை எடுத்து செல்லும் போது போலிசுடன் ஒரு பையன் வந்தான். அந்த பையன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளானா என்று தெரியாது. ஆனால் ஆஜர் எதிரிகளில் அவனை அடையாளம் காட்ட எனக்கு தெரியவில்லை. மேற்படி வண்டியை போலிசார் கைப்பற்றியதற்காக கைப்பற்றுதல் மகஜரில் என்னிடம் போலிசார் வாலாஜா

காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள். அந்த மகஜரில் கண்டுள்ள என்னுடைய கையெழுத்து **அ.சா.ஆ.10** ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH